**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 1 / 2019**

| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Rajaprakash |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of June, 2026.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 13.20 மணி

நான் தற்போது அரசு அம்பத்தூர் எஸ்டேட் பணிமனையில் நடத்துநராக மாநகர போக்கு வரத்து கழகத்தில் பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் 29-04-2018 அன்று இரவு 10.00 மணியளவில் தடம் எண் 77 என்கிற அரசு பேருந்தில் AMI 2537, பதிவெண் TN 01 8544 என்ற பேருந்தை ஓட்டுநர்

மனோகரன் கோயம்பேட்டிலிருந்து ஆவடி நோக்கி சென்று கொண்டிருந்தது. நான் நடத்துநராக இருந்தேன். பேருந்தில் 2 பயணிகள் கோயம்பேட்டிலிருந்து பேருந்திற்குள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். வாவின் பஸ்ஸ்டாப்பில் இறக்கிவிட்டோம். அதில் ஒருவர் கீழே இருந்த கல்லை எடுத்து பஸ்ஸின் பின்பக்க கண்ணாடிடைய உடைத்துவிட்டு ஓடிவிட்டார். பின்னர் அவசர எண் 100 க்கு போன் செய்தோம். அவருடைய பெயர் வில்சன் என்று கூறினார்கள். அவரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். சம்பவம் குறித்து எங்கள் மேல்அதிகாரிக்கு தகவல் கூறிவிட்டு மறுநாள் 30–04–2018 அன்று காலை 9.30 மணியளவில் அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையத் தில் புகாரை கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.